**யூகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம் -2015**

----------------------------------------------------------------

பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டம் II இன் (யூகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம்) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மற்றும் கொங்கொங் மற்றும் சங்காய் வங்கியியல் கூட்டுத்தாபன வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி (எச்எஸ்பீசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 21 ஆம் திகதிய 53எம்/எவ்சீ/1448 (201327/எஸ்எல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 104 கிராமிய பாலங்களின் வடிவமைப்பு, நில அளவை மற்றும் உருக்குப் பொருட்களினை வழங்கல்கள் மற்றும் நிர்மாணம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு அதற்காக தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். அந்த நோக்கங்களிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினது 2012 ஏப்ரல் 26 இல் வெளிநாட்டு கம்பனியுடன் உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,275.13 மில்லியனிற்குச் சமமான ஸ்ரேலிங் பவுன் 56.50 மில்லியன் (ஐ.அ.டொலர் 88.72 மில்லியன்) தொகையானதுடன் அதில் ரூபா 9,775.13 மில்லியனுக்குச் சமனான ஸ்ரேலிங்பவுன் 45 மில்லியன் (ஐ.அ.டொலர் 70.65 மில்லியன்) கொங்கொங் மற்றும்

சங்காய் வங்கியியல் கூட்டுத்தாபனக் கம்பனியால் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 18 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான

பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்ததா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுக்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்றும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகப் பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் வழங்கப்பட்ட நோக்கங்களுக்காவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் — மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் — 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | யூ.எஸ். டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | யூ.எஸ். டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| எச்எஸ்பீசீ | 70.65 | 9,775.13 | 2,075.00 | 13.97 | 1,856.77 | 60.72 | 7,982.75 |
| இலங்கை அரசாங்கம் | 18.07 | 2,500.00 | 497.40 | 3.40 | 497.35 | 7.62 | 1,113.93 |
| | **88.72** | **12,275.13** | **2,572.40** | **17.37** | **2,354.12** | **68.34** | **9,096.68** |

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ரூபா 9,775.13 மில்லியனுக்கு சமனான ஸ்ரேலிங் பவுன் 45 மில்லியன் (ஐ.அ.டொலர் 70.65 மில்லியன்) கிரயத்தில் வெளிநாட்டு கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பபட்ட 3,077.90 மீற்றர்கள் நீளத்துடன் 104 கிராமிய பாலங்களிற்காக அளவையிடல், வடிவமைத்தல், தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி வழங்கல் ஒப்பந்தத்தின் கீழான நோக்கெல்லைகள் மற்றும் 2015 திசெம்பர் 31 வரை 04 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்தது. ஆகையால், 16 புறவழி பாலங்கள் மற்றும் இணைந்த பாலமொன்றை உள்ளடக்கி 3,135.90 மீற்றர்கள் நீளத்துடன் 80 பாலங்களை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் வழங்குவதற்கு இணங்கப்பட்டது. அதில், 10 புறவழிபாலங்கள் மற்றும் இணைந்த பாலமொன்று உள்ளடக்கிய 39 பாலங்களின் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களப்பிரதேசங்கள் சுவீகரித்தல், வடிவமைப்பு மாற்றங்கள் மற்றும் இடஅமைவு மாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள் போன்றவற்றிலுள்ள சர்ச்சைகள் போன்ற பல காரணங்களால் 09 பாலங்களின் நிர்மாண வேலைகள் 05 மாதங்கள் தொடக்கம் 20 மாதங்கள் வரையிலான காலதாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டது. மேலும், 70 பாலங்களிற்கான உரிய மூலப்பொருட்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குவதற்கு இணங்கப்பட்ட போதிலும், 65 பாலங்களிற்கான நிர்மாண நோக்கங்களிற்கான உருக்கு சூப்பர் கட்டமைப்பு மூலப்பொருட்களானது ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்டது.

(ஆ) 26 பாலங்கள் தொடர்பான ரூபா 243.86 மில்லியன் கிரயத்திலான 47 முரண்கள் கட்டளைகளானது நில புவியியல் நிலைமை, மேலதிக வேலைகள், தவறான மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியங்களின் பற்றாக்குறைகள் போன்றவற்றால் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஆரம்ப கட்டங்களில் முறையான கவனம் செலுத்தியிருந்தால் அதற்கான மேலதிக கிரயமானது தவிர்க்கப்பட்டிருக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் கிரயம் ஸ்ரேலிங் பவுன் இல் தீர்மானிக்கப்பட வேண்டிய அதேநேரம் கடனளிக்கும் முகவருடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தொகையானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தீர்மானிக்கப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், முன்னைய 03 வருட காலப்பகுதியின் போது ஸ்ரேலிங் பவுனுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலரின் தேய்வில் ரூபா 130.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 892,781 தேறிய மற்றும் நட்டம் செயற்திட்டத்தால் ஏற்படுத்தப்பட்டது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறாமல் 05 ஆலோசனையாளர்கள் மற்றும் 04 பொது தொடர்பு உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 1.08 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது.